# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1710/25 - 2011 ජුනි 17 වැනි සිකුරාදා - 2011.06.17

*1710/25 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 104/44.*

**நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம் (87 ஆம் அத்தியாயம்)**

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

"ஸ்ரீ ராம் சந்திரா மிஷன் - இலங்கை நம்பிக்கைப் பொறுப்பின்" நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் , அதாவது-

1. திரு. செல்லையா சுந்தரமூர்த்தி,
2. டாக்டர் சிறீனிவாஸ் சரன்,
3. திரு. தம்பையா கனகசிங்கம்,
4. திரு. அருணாச்சலம் ஆறுமுகம் சதாசிவம்,
5. திருமதி கர்மேலைன் சந்தானி வில்லவராஜன்,
6. திரு. கனகசபை சண்முகரத்தினம் ரத்தினவேல் ; அத்துடன்
7. திருமதி கொரன்கல்லகே டொன் ஜயலக்ஷ்மி பெரேரா.

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சருக்கு அவர்களது கூட்டிணைப்புக்கென விண்ணப்பித்துள்ளார்களாதலால்,

ஆகவே, இப்போது, மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் ரவூப் ஹகீம் ஆகிய நான், இக்கட்டளைமூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன் பின்வருவனவற்றைச் செய்யுமாறும் பணித்து வெளிப்படுத்துகிறேன்:-

(அ) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு விதிகளின் கீழும் அத்துடன் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கந்தையா நீலகண்டன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, ஒகத்து 20 ஆந் திகதிய 1927 ஆம் இலக்கத்தைக் கொண்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகையின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டவர்களான அவர்களது பின்னுறுவோரும் "ஸ்ரீ ராம் சந்திரா மிஷன் - இலங்கை நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில் ஏதேனும் விவரணத்தினதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெற்றுக்கொள்ளலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்கு விடலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும் ; அத்துடன்

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பில் எழும் எல்லா வழக்குகளிலும் வழக்கெழு காரணங்களிலும் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தைக் கொண்டு இலங்கையில் அல்லது வேறெங்காயினுமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடை பகர்வதற்கும் விடை பகரப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டப்படி இயலுமானவர்களும் தகுதியுடையவர்களுமாதலும் வேண்டும்.

இக்கட்டளை எனக்கு அவசியமானதெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

ரவூப் ஹகீம்,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
2011, யூன் 2.

7- 118

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.